# செங்கல்பட்டு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள், செங்கல்பட்டு நகராட்சியில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தினசரி காய்கறி அங்காடி கட்டடம் கட்டும் பணி, செங்கல்பட்டு நகராட்சியில் 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகக் கட்டடம் கட்டும் பணி;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்**, செங்கல்பட்டு மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்கு 1 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்புடன் கூடிய முகாம் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி;

**என மொத்தம், 497 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**செங்கல்பட்டு மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில்** 13,966 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், 628 பயனாளிகளுக்கு முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை, விபத்து நிவாரணத் தொகை;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில்** 63 பயனாளிகளுக்கு பழங்குடியினருக்கான வீடு வழங்குதல், 287 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடு வழங்குதல்; **மகளிர் திட்டம் சார்பில் 25,356 பயனாளிகளுக்கு** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்பு, மகளிர் தொழில் முனைவோர் தனிநபர் கடன், கோழி மற்றும் ஆடு வளர்ப்பு, மீன்வள மதிப்புக் கூட்டு குழு, ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பு, காய்கறி பண்ணை தொகுப்பு, கிராமப்புற தொழில்முனைவோர் திட்டம், முதியோர் சுய உதவிக்குழு, அமுத சுரபி நிதி, சுழல் நிதி போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள்;

**வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 2,600 பயனாளிகளுக்கு** முதலமைச்சரின் மண்ணுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் போன்ற திட்டங்களில் உதவிகள், **தோட்டக்கலைத் துறை சார்பில் 744 பயனாளிகளுக்கு** ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம், நடமாடும் காய்கறி விற்பனை வண்டி, தமிழ்நாடு பாசன மேலாண்மை திட்டம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் உதவிகள்;

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 523 பயனாளிகளுக்கு**, இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், நவீன காதொலி கருவி, நவீன செயற்கை அவயம், எல்போ ஊன்றுகோல், சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், சிறப்பு சக்கர நாற்காலி, திறன்பேசி, மடக்கு குச்சி, கருப்புக்கண்ணாடி, வங்கி கடன் மானியம், தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை, கல்வி உதவித் தொகை போன்ற திட்டங்களின் கீழ் உதவிகள்;

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 509 பயனாளிகளுக்கு** திருமண நிதியுதவித் திட்டங்கள், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் வைப்பீடு, சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் ஆகிய திட்டங்களில் உதவிகள்;

**கூட்டுறவுத் துறை சார்பில் 942 பயனாளிகளுக்கு** கலைஞர் கைவினை மற்றும் நாட்டுப்புற கலைஞர் கடன் திட்டம், கல்வி கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன், பயிர்க்கடன், சிறுவணிகக் கடன், தொழில் முனைவோர் கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன், கால்நடை பராமரிப்புக் கடன் போன்ற திட்டங்களில் உதவிகள்;

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 500 பயனாளிகளுக்கு**, திருமண நிதியுதவி, இயற்கை மரண உதவித் தொகை, கல்வி நிதியுதவி, ஓய்வூதியம், பணியிடத்தில் விபத்து மரணம் நிவாரண உதவி;

**கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 1050 பயனாளிகளுக்கு**, மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தில் உரம் மற்றும் விதை கொள்முதல் மானியத் தொகை, கணவனை இழந்த கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற கிராமப்புற பெண்களுக்கு கோழிக்குஞ்சுகள் மானிய விலையில் வழங்குதல், தாது உப்புக் கலவை வழங்குதல், ஒருங்கிணைந்த தீவன அபிவிருத்தித் திட்டத்தில் பழந்தோட்டம் மற்றும் தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக தீவன சாகுபடி போன்ற திட்டங்களில் உதவிகள்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 228 பயனாளிகளுக்கு** மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் வீடு தேடி மருந்து வழங்குதல், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட அட்டைகள் வழங்குதல்;

**உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 1577 பயனாளிகளுக்கு** புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்;

**என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 508 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 50,606 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

**நகர்ப்புறப் பகுதிகளில் பட்டா வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல்**

**சென்னையை சுற்றியிருக்கக்கூடிய நான்கு மாவட்டங்களில், பெல்ட் ஏரியா பகுதிகளில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட நெடுங்காலமாக வீடு கட்டி குடியிருப்பவர்கள், பட்டா பெறமுடியாமல் சிரமப்படுவதை அறிந்து 10.2.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் இருக்கக்கூடிய பெல்ட் ஏரியா மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட முடிவு செய்யப்பட்டு, அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது.**

**இதற்காக மாவட்ட அளவில் ஒரு குழுவும், சென்னையில் மாநில அளவில் ஒரு குழுவும் அமைத்து உடனடியாக அந்தப் பணிகளை துவங்கி ஆறு மாத காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.**

**அதன்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் 214 நபர்களின் நிலத்தை வரன்முறைப்படுத்தி அவர்களுக்கு பட்டாக்களை வழங்கி நகர்ப்புறப் பகுதிகளில் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தொடங்கி வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், எஸ்.எஸ். பாலாஜி, எம். பாபு, முன்னாள் எம்.எல்.ஏ. - ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.டி.அரசு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். அருண்ராஜ், தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புத் தாது

# நாட்டின் மொத்தத் தேவைக்கு போதுமானதாக உள்ளதா?

## மக்களவையில் – கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச். 13-

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புத் தாது மற்றும் எஃகு இரண்டின் மொத்த உற்பத்தி திறன் உண்மையான உற்பத்தி நுகர்வு ஆகியவை நாட்டின் மொத்த தேவைக்கு போதுமானதாக இருந்ததா? என மக்களவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் இரும்புத் தாது மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட எஃகு இரண்டின் மொத்த உற்பத்தி திறன் உண்மையான உற்பத்தி நுகர்வு ஆகியவை நாட்டின் மொத்த தேவைக்கு போதுமானதாக இல்லையா?

அப்படியானால் கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொன்றிலும் ஆலை வாரியாக எஃகு உற்பத்தி விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டின் சேலத்தில் உள்ள ஒருங்கிணைந்த எஃகு ஆலையின் மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலுக்கு நிதியளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ஏதேனும் புதிய எஃகு உற்பத்தி நிறுவனம் உருவாக்கப்படுவது குறித்த விவரங்கள் தருக?

எஃகு சந்தை திறனையும் வாடிக்கையாளர் சேவைகளின் உயர் தரத்தையும் அதிகரிக்க இந்திய எஃகு ஆணையம் (SAIL) மற்றும் SAIL இன் பிற துணை நிறுவனங்கள் புதிய சந்தையைத் திறப்பதில் கவனம் செலுத்துகின்றனவா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை? என கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் எஃகு அமைச்சகத்தின் இணை அமைச்சர் பூபதி ராஜு ஸ்ரீநிவாச வர்மா எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட எஃகு மற்றும் இரும்புத் தாது உற்பத்தியின் திறன் உற்பத்தி மற்றும் நுகர்வு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

கடந்த 2021-22, 2022-23, 2023-24 ஆண்டுகளில் உற்பத்தி திறன்/உற்பத்தி செய்யப்பட்ட/ நுகர்வு செய்த எஃகு (மில்லியன் டன்னில்) விவரம் கீழ் வருமாறு.

2021-22-ஆம் ஆண்டு 152.81 மில்லியன் டன் திறனில் 113.60 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. நுகர்வு 105.75 மில்லியன் டன்னாக இருந்தது.

2022-23-ஆம் ஆண்டு 151.25 மில்லியன் டன் திறனில் 123.20 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. நுகர்வு 119.89 மில்லியன் டன்னாக இருந்தது.

2023-24-ஆம் ஆண்டு 170.77 மில்லியன் டன் திறனில் 139.15 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. நுகர்வு 136.29 மில்லியன் டன்னாக இருந்தது.

அதே நேரத்தில் கடந்த 2021-22, 2022--23, 2023--24 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புத் தாது (மில்லியன் டன்னில்) விவரம் கீழ் வருமாறு.

2021-22-ஆம் ஆண்டு 254.10 மில்லியன் டன் இரும்புத்தாது உற்பத்தி செய்யப்பட்டது.

2022-23-ஆம் ஆண்டு 258.37 மில்லியன் டன் இரும்புத்தாது உற்பத்தி செய்யப்பட்டது.

2023-24-ஆம் ஆண்டு 276.75 மில்லியன் டன் இரும்புத்தாது உற்பத்தி செய்யப்பட்டது.



கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் உள்ள பல்வேறு எஃகு உற்பத்தி நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட எஃகு குறித்த விவரங்கள் கீழ் வருமாறு:-

இந்திய எஃகு ஆணையம் வாயிலாக

2021-22-ல் 13.83 மில்லியன் டன், 2022-23-ல் 15.28 மில்லியன் டன், 2023-24-ல் 16.26 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ராஷ்ட்ரிய இஸ்பத் நிகாம் லிமிடெட் மூலமாக

2021-22-ல் 3.75 மில்லியன் டன், 2022-23-ல் 3.64 மில்லியன் டன், 2023-24-ல் 3.73 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

என்.எம்.டி.சி. ஸ்டீல் லிமிடெட் மூலம்

2023--24-ல் 0.53 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

டி.எஸ்.எல். குழு வாயிலாக

2021--22-ல் 18.74 மில்லியன் டன், 2022-23-ல் 19.46 மில்லியன் டன், 2023-24-ல் 21.15 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஏ.எம்./என்.எஸ். குழு மூலம்

2021-22-ல் 7.22 மில்லியன் டன், 2022--23-ல் 6.68 மில்லியன் டன், 2023--24ல் 7.55 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஜெ.எஸ். டபிள்யு. எல். குழு மூலம்

2021-22-ல் 16.37 மில்லியன் டன், 2022-23-ல் 21.79 மில்லியன் டன், 2023-24-ல் 23.26 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஜெ.எஸ்.பி.எல். நிறுவனம் மூலம்

2021-22-ல் 5.15 மில்லியன் டன், 2022-23-ல் 5.42 மில்லியன் டன், 2023-24-ல் 5.75 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

நாட்டில் உள்ள மற்ற நிறுவனங்கள் மூலம்

2021-22-ல் 48.54 மில்லியன் டன், 2022-23-ல் 50.93 மில்லியன் டன், 2023-24-ல் 60.92 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆக மொத்தம்

2021-22-ல் 113.60 மில்லியன் டன், 2022-23-ல் 123.20 மில்லியன் டன், 2023-24-ல் 139.15 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆதாரம்: கூட்டு ஆலைக் குழு

எஃகு என்பது ஒழுங்குபடுத்தப்படாத துறையாகும்> மேலும் தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் எஃகுத் துறையின் வளர்ச்சிக்கு உகந்த கொள்கை சூழலை உருவாக்குவதன் மூலம் ஒன்றிய அரசு ஒரு வசதி ஏற்படுத்திக் தருவதாக செயல்படுகிறது. எஃகு ஆலை அமைப்பது தொடர்பான முடிவுகள், மூலப் பொருள் கிடைக்கும் தன்மை, துறைமுகத்திலிருந்து தூரம், தளவாடங்கள் போன்ற தொழில்நுட்ப -வணிகக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் தொழில்துறையால் எடுக்கப்படுகின்றன.

ஆண்டுக்கு 1,80,000 டன் துருப்பிடிக்காத எஃகு அடுக்குகளை உற்பத்தி செய்யும் திறனை அதிகரிக்க இந்திய எஃகு ஆணையம் (SAIL) ஏற்கனவே சேலம் எஃகு ஆலையை விரிவுபடுத்தி நவீனப்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

---

### மாணவர்களுக்குச் செலவிட வேண்டிய நிதியை, மாநில அரசுக்கு எதிராக பழிவாங்கும் கருவியாகப் பயன்படுத்துவதா?

# தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்!

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 13-

“தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்” என்று நாடாளுமன்ற - மக்களவையில் நேற்று, தென் சென்னை தொகுதி கழக நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.

மக்களவையில் கேள்வி நேரத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் பேசியதாவது:-

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட சுமார் 2000 கோடி ரூபாய் PM SHRI திட்டத்திற்கான நிதி, NEP 2020ஐ தமிழ்நாடு அரசு எதிர்த்ததன் காரணமாக மற்ற மாநிலங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, எங்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ள கவலையை நான் இங்கு எழுப்ப விரும்புகிறேன். இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு அடிக்கப்படும் சாவுமணி ஆகும் . மேலும், உங்கள் மூலமாக அமைச்சரிடம் கேட்க விரும்புவது, பள்ளிக் கல்வி மாணவர்களுக்காகச் செலவிட வேண்டிய நிதி ஒதுக்கீட்டை மாநில அரசுக்கு எதிராக பழிவாங்கும் கருவியாக பயன்படுத்துவது சரியானதா? இது உண்மையில் பள்ளி மாணவர்களின் கல்வியைப் பாதிக்கிறது.



பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மத்திய அரசிடம் கேட்க விரும்புகிறேன், சட்டமாக்கப்படாத கொள்கையை நிராகரிப்பதற்காக எந்த மாநிலமும் நிதி முடக்கத்துக்கு ஆளாக மாட்டாது என்ற உறுதிமொழியை பாராளுமன்றத்திற்கு அளிக்குமா?

இந்த விஷயம் வெறும் நிதி பற்றியது அல்ல, இது நமது அரசியலமைப்பின் அடிப்படை அம்சமான கூட்டாட்சி முறை பற்றியது. மாநிலங்களின் அதிகாரங்களை மதித்து, அவற்றின் தனித்துவமான தேவைகளை புரிந்து கொள்வது மிக முக்கியம். தமிழ்நாடு எப்போதும் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து வந்துள்ளது, இது எங்கள் மாநிலத்தின் நிலைப்பாடு.

கல்வி என்பது மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் முக்கிய காரணி. அரசியல் வேறுபாடுகளின் பெயரால் மாணவர்களின் வாழ்க்கையை பாதிக்க அனுமதிக்க முடியாது. நாங்கள் கொள்கை அடிப்படையில் NEPஐ எதிர்க்கிறோம், ஆனால் அதற்காக எங்கள் மாணவர்கள் தண்டிக்கப்படக்கூடாது.

இது தமிழ்நாட்டின் பிரச்சினை மட்டுமல்ல. இன்று தமிழ்நாடு இந்த பாதிப்புக்கு உள்ளாகியிருந்தால், நாளை வேறு மாநிலங்களும் இதே நிலைக்கு தள்ளப்படலாம். எனவே, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கொள்கை வேறுபாடுகளை நிதிக் குறைப்புக்கான காரணமாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் குறிப்பிட்டார்.

---

### பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# ரயில் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்!

## மக்களவையில் அருண் நேரு கோரிக்கை!

புதுடெல்லி,மார்ச் 13-

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ரயில் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மக்களவையில் அருண் நேரு கோரிக்கை விடுத்தார்-

மக்களவையில் பெரம்பலூர் தொகுதி எம்பி அருண் நேரு பேசியது வருமாறு:-

பிரதமரின் தொகுதி என்பதால் வாரணாசி மேம்படுத்தப்பட்டுள்ளது அதே போல் உள்துறை அமைச்சர் தொகுதி என்பதால் அகமதாபாத் (காந்திநகர்) மேம்படுத்தப்பட்டுள்ளது

நான் மிகவும் பின்தங்கி உள்ள பெரம்பலூர் தொகுதியைச் சேர்ந்தவன் எங்கள் தொகுதிக்குட்பட்ட முசிறியில் பிறந்தவர் நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமன்.

ரயில் வசதி என்பது எங்கள் தொகுதி மக்கள் பல ஆண்டுகளாக கனவாகவே உள்ளது இந்த கனவை நினைவாக்கும் வகையில் பெரம்பலூர் தொகுதியில் ரயில் தடம் அமைக்க கோரிக்கை விடுக்கிறேன்



நாட்டின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

சுதந்திரம் அடைந்த போது உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், ஒடிசா ,குஜராத் மாநிலங்களைப் போல் தான் தமிழகமும் கல்வி வளர்ச்சி இருந்தது ஆனால் இந்த மாநிலங்களை விட இன்று கல்வி வளர்ச்சியில் இருமொழிக் கொள்கையை கடைப்பிடித்து நாங்கள் முதலிடத்தில் உள்ளோம்

நமது நாட்டின் வலிமையே கூட்டாட்சி தான். கூட்டாட்சி முறையில் வருவாயும், செலவும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் மாநிலத்தில் மக்களின் செலவில் 60% மாநில அரசு ஏற்க வேண்டும் மீதி உள்ள 40% உள்ளாட்சி அமைப்புகள் வரி வசூல் மூலம் திரட்ட வேண்டும்

வருவாய் சரியாக கிடைக்காவிடில் கடன் வாங்குவது வழக்கமாக உள்ளது கடன் வாங்குவது தவறு இல்லை ஆனால் அதிகாரங்களை மாநில அரசிடமிருந்து ஒன்றிய அரசு பறித்துக் கொண்டுள்ளது ஒவ்வொன்றுக்கும் ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டிய நிலையில் உள்ளது இந்த நிலை மாற வேண்டும்

இல்லாவிடில் ஒன்றிய, மாநில அரசு மாநில அரசுகள் உறவு கடுமையாக பாதிக்கும் என்று பெரம்பலூர் தொகுதி பாராளுமன்ற எம்பி அருண் நேரு பேசினார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார். அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ., ம.ஜெயசந்திரன், சிவ. ஜெயராஜ், ஜெ.ஜெயபால், ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, சங்கீதாஅரசி, மீனா வெங்கடேசன், ஜீவிதா, C.முரளி, வெங்கடேசன் , ராம்குமார், வேல்முருகன், சாவித்திரி பாலு, ரவிச்சந்திரன், அசோக்குமார், உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, கழக தகவல் தொழில்நுட்ப அணியில் உறுப்பினர்களை சேர்க்கும் நிகழ்ச்சி பண்ருட்டியில் அண்ணா கிராம ஒன்றிய கழக அலுவலகத்தில் பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் செ. புஷ்பராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் வி.கே.வெங்கட்ராமன், கே.ராஜேந்திரன், மணிவண்ணன், சந்தோஷ் குமார், ஜெயமூர்த்தி, ஆனந்தி சரவணன், தணிகை செல்வம் ஆகியோர் பங்கேற்றனர்.